# ஆய்வாளர் அறிக்கை

பெறுநர்:- இணை ஆணையயர் அவர்கள்,
இந்து சமய அறநிலையத் ஆட்சித்துறை,
தஞ்சாவூர்.

ஒ.மு.எண். 12004 / நாள். 5.1.2010

பொருள்:- அசல் வழக்கு அ.ம. 5/07 - ச.பி.63(b)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் மீது மனுதாரர், ஊர் மக்கள், மற்றும் ஊர் பிரமுகர்களிடம் விசாரணை செய்தும் வாக்குமூலங்கள் பெற்றும் அறிக்கை சமர்ப்பித்தல் - அ.மி. அ/மி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் - வெண்டாக்கோட்டை, பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - தொடர்பாக.

பார்வை:- 1. தஞ்சாவூர் இணை ஆணையர் அறிவிப்பு
அசல் மனு எண். 5/07/இ2/நாள்.7.5.07
மற்றும் 25.12.2009.

பார்வை குறிப்புடன் வரப்பெற்ற மேற்கண்ட அசல் மனு குறித்து 29.12.2009 அன்று மேற்படி மனுதாரர்களை விசாரணை செய்தும் வாக்குமூலங்கள் பெற்றும் எனது அறிக்கையினை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை கிராமத்தில் உள்ள அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ச.பி. 63(b)-ன்கீழ் பரம்பரை அறங்காவலர் உரிமம் வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் பின்வரும் மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்ட விபரம் வருமாறு-

மனுதாரர்கள்

1) திரு. ஆர். ராமசாமி, S/o. ரெங்கசாமி வேளாளர்,
2) திரு. சி. பழனிவேல், S/o. சின்னக்கண்ணு
3) திரு. எம். சோலை வாசன், S/o. முருகையன் செட்டியார்,
4) திரு. ஆர். ராஜேந்திரன், S/o. ராமலிங்க தொண்டைமான்,
5) திரு. சி. ரெங்கசாமி, S/o. சிதம்பரம் முதலியார்.

மனுதாரர்களின் முதாதையர்கள் நான்கு கரைகளாக செயல்பட்டு ஷெ திருக்கோயில் கட்டியதுடன், திருக்கோயிலுக்கு சொத்துக்கள் எழுதி வைத்து அன்று முதல் பராமரித்து வந்துள்ளார்கள் என்றும், ஷெ ஆலயத்தின் சொத்துக்கள் 1911-ல் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் மனுதாரர்களாகிய தங்களின் மூதாதையர்கள் நம்பகர்கள் என்று பதிவாகி உள்ளதாகவும், மேலும் மனுதாரர்களின் முதாதையர் 1) தர்மராஜ் வெளாளர் மகன் கோவிந்தசாமி வேளாளர், 2) தம்பிராயார் வேளாளர் மகன் ராஜப்பா வேளாளர்,

3) சாமி செட்டியார் மகன் சொக்கலிங்கம் செட்டியார், 4) வடமலை நாயக்கர் மகன் கோவிந்தசாமி நாயக்கர், 5) ராமசாமி முதலியார் மகன் ரெங்கசாமி முதலியார் என்பவர்கள் ஷை கோயிலின் சொத்துக்களை பராமரித்து வரவும், கோயிலை பராமரிக்கவும் இருபத்தி மூன்று நபர்கள் செய்த கொண்ட ஒப்பந்தம் இந்த வழக்கில் தாக்கல் செய்து இருப்பதாகவும் தங்கள் மூதாதையர்கள் நிர்வகிக்கப்பட்ட திருக்கோயிலை ஷை திருக்கோயில் மேலும் முன்னேற்றம் அடைய ஏற்பாடு செய்யவும் சொத்துக்களை பராமரிக்கவும் நான்கு கரையாக செயல்பட்டு நிர்வாகம் பார்த்துவர ஏதுவாக இலக்கா ச.பி. 63(b)-ன் கீழ் பரம்பரை அறங்காவலர்களாக நியமனம் செய்ய வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி அசல் மனுவின் மீது கடந்த 29.12.09 அன்று மனுதாரர்கள் ஐந்து நபர்களிடம் விசாரனை செய்தும், ஊரில் வயது முதிர்ந்தவர்களிடம் விசாரனை செய்தும், ஊர் முக்கியஸ்தர்களிடம் விசாரனை செய்தும், வழக்கு மூலங்கள் எடுத்து எனது அறிக்கையினை பின்வருமாறு பணிந்து சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

**முதல் மனுதாரர்:-** லேட் ரெங்கசாமியின் மகன் ராமசாமி:- தனக்கு 61வயது ஆகிறது என்றும் சிறுவயது முதல் ஊரில் வசித்து வருவதாகவும் மேற்படி திருக்கோயில் நான்கு கரைதாரர்களான தங்களின் மூதாதையர்கள் சொத்து எழுதி வைத்தும், சொத்தினை பராமரித்ததுடன், திருக்கோயில் நிர்வாகத்தையும் பல தலை முறையாக பார்த்து வந்துள்ளனர் என்றும் மேற்படி மனுதாரர்களாகிய தங்களை பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்ய வேண்டும் என்றும் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

**இரண்டாம் மனுதாரர்:-** திரு. சி. **பழனிவேல்,** த/பெ. சின்னக்கண்ணு:- தனது வயது நாற்பது என்றும் சிறுவயது முதல் ஊரில் வசிப்பதாகவும் தங்களுடைய மூதாதையர்களால் ஷை கோயிலுக்கு சொத்து எழுதி வைதும் பல தலை முறையாக நிர்வாகமும் பார்த்து வருவதாகவும் மேலும் கோயிலை பராமரிக்க பரம்பரை அறங்காலராக உத்தரவு வழங்க கேட்டுள்ளார்.

**மூன்றாம் மனுதாரர்:-** திரு. சோலை வாசன், த/பெ. முருகையன்:- தனக்கு 55வயதாகிறது என்றும், சிறுவயதில் முதல் கிராமத்தில் வசித்து வந்ததாகவும், மனுதாரர்களாகிய எங்கள் மூதாதையர்களால் பல தலைமுறைகளாக திருக்கோயில் நிர்வாகம் மற்றும் சொத்துக்களை பராமரித்து வந்ததாகவும். இன்று வரை பராமரித்து வருவதுடன், மேலும் கோயிலை வளர்ச்சி அடையச் செய்ய, மனுதாரர்களாகிய தங்களை பரம்பரை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என வாக்குமூலம் அளித்துள்ளார்.

**நான்காம் மனுதாரர்:-** திரு. **ஆர்.ராஜேந்திரன்,** த/பெ. ராமலிங்கம்:- தனக்கு வயது54 எனவும், சிறுவயதிலிருந்து கிராமத்தில் வசித்து வருவதாகவும், தங்களின்

மூதாதையர்களால் மேற்படி கோயில் கட்டி, சொத்துகள் எழுதி வைத்து, பல தலைமுறைகளாகவும் இன்று வரையிலும் நிர்வகித்து வருவதாகவும், இதனை ஊர் பெரிய மனிதர்களிடம் விசாரித்தும் உரிய ஆவணங்கள் அடிப்படையிலும், பரம்பரை அறங்காவலராக நியமணம் செய்து உத்தரவு வழங்கினால் இலக்கா சட்ட விதிகளுக்குட்பட்டு நடந்து கொள்வதாக வாக்குமூலம் சமர்ப்பித்துள்ளார்.

ஐந்தாம் மனுதாரர்:- திரு. சி. ரெங்கசாமி, த/பெ. சிதம்பரம்.

தனக்கு 75வயது ஆகிறது என்றும், ஷை திருக்கோயிலுக்கு மனுதாரர்கள் 5நபர்களின் மூதாதையர்கள் சொத்து எழுதி வைத்தும், பல தலை முறையாக கோயிலை நிர்வகித்து வந்துள்ளனர் என்றும், மேற்படி பல தலை முறையாக நான்கு கரைதாரர்களின் வாரிசு தாரர்களாகியவர்களும், மனுதாரர்களாகிய எங்களுக்கு பரம்பரை அறங்காவலர்களாக நியமனம் செய்து உத்தரவிட வேண்டும் என்றும் நாங்கள் சட்ட விதிகளுக்குட்பட்டு நிர்வாகம் பார்க்கிறோம் என வாக்குமூலம் அளித்துள்ளார்.

முக்கிய பிரமுகர் ஊராட்சி மன்ற தலைவர் ஷை கிராமம், திரு. கோ. புருஷோத்தமன் த/பெ. கோவிந்த வேளாளர் என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம்:- தனக்கு 53வயது என்றும் மேற்படி ஊராட்சிக்கு உட்பட்ட புல எண்: 8(1), 111-ல் உள்ள அ/மி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு உள்ள இடமும், ஷை திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களும் மேற்படி நபர்களால் பராமரித்து வரப்படுகிறது. ஷை சொத்துக்கள் மேற்படி ஐந்து நபர்களின் மூதாதையர்களால் பராமரிக்கப்பட்டு வந்ததாகவும் தற்போது மேற்படி சொத்தை ஐந்து நபர்களும் பராமரித்து வருவதாகவும் மேற்படி சொத்துக்களின் பட்டாவில் மேற்படி நபர்களின் மூதாதையர்கள் நம்பகர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

1) திரு. ஆர். ராமசாமி வேலாளர், த/பெ. ரெங்கசாமி வேளாளர்,
2) திரு. சி. பழனிவேல் வேளாளர், த/பெ. சின்னக்கண்ணு வேலாளர்
3) திரு. மு. சோலை வாசன் செட்டியார், த/பெ. முருகையன் செட்டியார்
4) திரு. ஆர். ராஜேந்திரன் தொண்டைமார், த/பெ. ராமலிங்கம் தொண்டைமார்
5) திரு. சி. ரெங்கசாமி முதலியார், த/பெ. சிதம்பரம் முதலியார்

ஊர் பெரியவர் (வயது முதிர்ந்தவர்):- வீரபெருமாள், த/பெ. கோவிந்த வேளாளர்:- அன்னாரின் வயது80. கடந்த 1984 முதல் 1989 முடிய ஷை கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவராக இருந்துள்ளார் என்றும், மேற்படி கிராமத்தில் உள்ள அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலும், ஷை திருக்கோயிலின் சொத்துக்களையும்

பின்வரும் நபர்களின் மூதாதையர்கள் மேற்படி கோயிலுக்கு தானமாக வழங்கி பல தலை முறையாக நான்கு கரைதாரர்களாக இருந்து பராமரித்து வந்துள்ளார்கள் என்றும் அன்னார்களுக்கு பரம்பரை உரிமை வழங்கினால் மேற்படி திருக்கோயில் மென் மேலும் வளர்ச்சி அடையும் என வாக்கு மூலம் கொடுத்துள்ளார்.

1) திரு. ஆர். ராமசாமி, S/o. ரெங்கசாமி
2) திரு. சி. பழனிவேல், S/o. சின்னக்கண்ணு
3) திரு. மு. சோலை வாசன், S/o. முருகையன்
4) திரு. ஆர். ராஜேந்திரன், S/o. ராமலிங்கம்
5) திரு. சி. ரெங்கசாமி, S/o. சிதம்பரம்

<u>ஊர் வயது முதிர்ந்த பெரியவர் திரு. மு. கணபதி, S/o.</u> முருகையன்:- தனக்கு வயது69 என்றும் சிறுவயது முதல் ஷை கிராமத்தில் வசித்து வருவதாகவும் ஷை கிராமத்தில் உள்ள அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மிகவும் பழுதடைந்த இருந்ததாகவும், ஷை கோயிலை பின்வரும் நான்கு கரைதாரர்களின் முயற்சியாலும் உழைப்பாலும் பொருளாதார உதவியாலும் பழுது பார்க்கப்பட்டு கடந்த 2008-ல் கும்பாபிஷேகம் நடை பெற்றதாகவும், ஷை திருக்கோயில் இடம் திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்கள் ஷை நான்கு கரைதார்களின் மூதாதையர்களால் எழுதி வைக்கப்பட்டது என்றும், ஷை சொத்துக்களையும் திருக்கோயிலையும் பல தலை முறையாக கவனித்து வருவதாக வாய்வழி செய்தியாகவும் தனது மூதாதையர்கள் மூலமும் அறிந்து கொண்டேன் என்று மேற்படி நபர்களை பரம்பரை தர்ம கர்த்தாவாக செயல்பட அனுமதி வேண்டி உள்ளது ஏற்புடையது என்றும், ஷை நபர்களை பரம்பரை தர்மகர்த்தாவாக உரிமம் வழங்கினால் மேற்படி திருக்கோயில் மென் மேலும் சிறப்படையும் என வாக்கு மூலம் அளித்துள்ளார்.

அசல் மனு 5/07 குறித்து கடந்த 29.12.09 அன்று நடை பெற்ற விசாரனை, பெறப்பட்ட வாக்குமூலம் அடிப்படையில் மனுதாரர்களின் மூதாதையர்கள் திருக்கோயில் ஏற்படுத்த இடம், திருக்கோயில் பராமரிப்பிற்கு சொத்தும் கொடுத்துள்ளார்கள். மேலும் ஷை திருக்கோயிலை பல தலைமுறையாக பராமரித்து வந்துள்ளார்கள். எனவே தான் ஷை திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலர் உரிமை வேண்டி மனு செய்துள்ளார்கள்.

மேற்படி திருக்கோயில் இடம் மற்றும் சொத்து அடங்கல்களிலும் பட்டாவிலும் அன்னார்களின் மூதாதையர்களின் பெயர் நம்பகர்கள் என குறிப்பிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

தற்போது மேற்படி திருக்கோயிலுக்கு பாலத்தளி அ/மி துர்க்கையம்மன் திருக்கோயில் செயல் அலுவலரை தக்காராக நியமனம் செய்து நிர்வாகம் பார்த்து வரப்படுகிறது. விதி6-ன்கீழ் உதவி தொகை நிர்ணயம் செய்து இலக்கா கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதும் கடந்த 2008-ல் புதுப்பிக்கப்பட்டு

கும்பாபிசேகம் நடைபெற்றுள்ளது. உண்டியல் நிறுவப்பட்டு முதல் முதலாக ஒரு முறை உண்டியல் திறக்கப் பட்டுள்ளது. உண்டியல் வருமானம் 19,000/- ரூபாய். வெள்ள நிவாரண தொகையாக ரூ.26,000/- பெறப்பட்டு வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திருக்கோயில் மேற்கு முகமாக உள்ளது. திருக்கோயிலின் வாயிலில் சுமார் 300ஆண்டுகளுக்கு மேற்பட்ட குருதி வேங்கை மரம் உள்ளது. இத்திருக்கோயிலின் தென் கிழக்கில் தனியாருக்கு சொந்தமான இரும்பன் கோயில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு கிழக்கு வடக்குகளில் தார் சாலை உள்ளது. இத்திருக்கோயிலுக்கு வடகிழக்கில் ஆர்ச் கட்டப்பட்டுள்ளது. திருக்கோயில் சலவை கற்கள் பதித்து அழகாக உள்ளது. திருக்கோயிலுக்குள் தென்மேற்கில் பிள்ளையார் சன்னிதியும், வடமேற்கில் சிவன் பார்வதி சன்னிதியும் உள்ளது. திருக்கோயிலின் மேல்புறம் 300அடி குளம் (சங்கர புஷ்கரனி) உள்ளது.

மேற்படி அசல் மனு எண். 5/07-ல் பெறப்பட்ட வாக்குமூலம் மற்றும் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள், மற்றும் மனுதாரர்கள், சாட்சிகள் விசாரணைகளின் அடிப்படையில் தக்க உத்தரவு பிறப்பு விக்கலாம் என எனது அறிக்கையினை பணிந்து சமர்ப்பித்து கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

S/d:-

R. ஒளிநிலா,
12/-2010
ஆய்வாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
பட்டுக்கோட்டை.

சட்டப் பிரிவு 63(b)-ன்படி அறங்காவலராக பிரகடனம் செய்ய வேண்டிய விண்ணப்பத்திற்கான படிவம்

| | |
|---|---|
| 1) திருக்கோயில் யாரால் நிறுவப்பட்டது | மேற்படி திருக்கோயிலுக்கு 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலர்களாக நியமனம் செய்யக்கேட்டு விண்ணப்பித்துள்ள 1 முதல் 5 வரையிலான நபர்களின் மூதாதையர்களால் ஷை கோயில் நிறுவப்பட்டும், சொத்துக்கள் எழுதி வைத்தும், சொத்துக்கள் மற்றும் திருக்கோயிலையும் பராமரிக்கபட்டது எனவும் மேற்படி திருக்கோயிலின் சிட்டா மற்றும் அடங்களில் மூதாதையர்களை நம்பகர்களாக குறிப்பிடப் பட்டுள்ளது. |
| 2) ஆரம்ப காலத்தில் பத்திரம் ஏதேனும் உள்ளதா? | மேற்படி ஆலயத்தின் சொத்துக்கள் கடந்த 1911-ல்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஷை பதிவில் விண்ணப்பதாரர்களின் மூதாதையர்களை நம்பகர் என குறிப்பிடப் பட்டுள்ளது. |
| 3) மனுதாரர்களின் குடும்பத்தில் ஸ்தபகரிடமிருந்து வாரிசு உரிமைப்படி பரம்பரை உரிமை தொடர்ச்சியாக உள்ளதா? | இல்லை |
| 4) மனுதாரரின் குடும்பம் தவிர வேறு யாரேனும் நிர்வாகம் செய்துள்ளனரா? | இல்லை |
| 5) மனுதாரரின் முன்னோர்கள் ஸ்தாபர்தர்களின் தொடர்பில் அறங்காவலர்களாக பதவி வகித்து வருகிறார்களா? இடையில் மாறுதல் செய்யப்பட்டதா | இல்லை<br>மனுதாரர்களின் முன்னோர்கள்தான் தொடர்ந்து நிர்வாகத்தை பார்த்து வந்துள்ளனர். தற்போது மனுதாரர் அ.மி. துர்க்கையம்மன் திருக்கோயில் செயல் அலுவரை தக்காராக நியமனம் செய்து நிர்வாகம் பார்த்து வரப்படுகிறது. |
| 6) வாரிசு உரிமம் வழக்கு முறை உள்ளதா? | இல்லை |
| 7) மேற்படி திருக்கோயிலுக்கு மூலம் நியமிக்கபட்டுள்ளதா? | இல்லை |
| 8) இந்த நபர்களுக்கு பரம்பரை அறங்காவலர்களின் பாத்யம் உள்ளது என்பதற்கு என்ன ஆதாரம்? | 1911-ம் ஆண்டு நிலங்கள் பதிவு செய்யும் போது தற்போதைய விண்ணப்ப நபர்களின் மூதாதையர்களை திருக் கோயிலின் நம்பகர்கள் என பதிவாகி உள்ளது. இதனை தவிர பரம்பரை |

| | |
|---|---|
| | அறங்காவலர்கள் குறித்து பாத்தியதை எவருக்கும் இல்லை. |
| 9) சொத்துக்கள் கோயிலின் பெயரில் பதிவு செய்யப் பட்டுள்ளதா? மனுதாரரின் முன்னோர்களுக்கும் மேற்படி சொத்துக்களுக்கும் தொடர்பு உள்ளதா? | சொத்துக்கள் திருக்கோயிலின் பெயரில் உள்ளது. 1911-ம் ஆண்டு, சொத்துக்கள் பதிவு செய்யப்பட்ட போது ஷ விண்ணப்ப தாரர்களின் மூதாதையர்களை நம்பகர்களாக குறிப்பிடப் பட்டுள்ளது. |
| 10) மேற்படி திருக்கோயிலின் நிர்வாகம் வெளி நபர்கள் நிர்வாகத்தில் இருந்துள்ளதா? | இல்லை |
| 11) மரபு தொடர்பாக ஏதாவது வழக்கத்தில் இருந்து வருகிறதா? அப்படி இருந்தால் ஏதாவது தொன்று தொட்டு உள்ளதா? தொடர்ச்சியாக உள்ளதா? | இல்லை |
| 12) எதிர் நிலையான ஆதாராங்கள் | இல்லை |
| 13) இதர குறிப்புகள் | ---- |

S/d:-
R.ஒளிநிலா, ஆய்வாளர்,
பட்டுக்கோட்டை.

| | |
|---|---|
| | அறங்காவலர்கள் குறித்து பாத்தியதை எவருக்கும் இல்லை. |
| 9) சொத்துக்கள் கோயிலின் பெயரில் பதிவு செய்யப் பட்டுள்ளதா? மனுதாரரின் முன்னோர்களுக்கும் மேற்படி சொத்துக்களுக்கும் தொடர்பு உள்ளதா? | சொத்துக்கள் திருக்கோயிலின் பெயரில் உள்ளது. 1911-ம் ஆண்டு, சொத்துக்கள் பதிவு செய்யப்பட்ட போது ஷ விண்ணப்ப தாரர்களின் மூதாதையர்களை நம்பகர்களாக குறிப்பிடப் பட்டுள்ளது. |
| 10) மேற்படி திருக்கோயிலின் நிர்வாகம் வெளி நபர்கள் நிர்வாகத்தில் இருந்துள்ளதா? | இல்லை |
| 11) மரபு தொடர்பாக ஏதாவது வழக்கத்தில் இருந்து வருகிறதா? அப்படி இருந்தால் ஏதாவது தொன்று தொட்டு உள்ளதா? தொடர்ச்சியாக உள்ளதா? | இல்லை |
| 12) எதிர் நிலையான ஆதாராங்கள் | இல்லை |
| 13) இதர குறிப்புகள் | ---- |

S/d:-

R.ஒளிநிலா, ஆய்வாளர்,
பட்டுக்கோட்டை.

வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இலக்கா ச.பி. 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலர் நியமனம் செய்வதற்கு மனுதாரர் மேற்படி கிராமத்தை சேர்ந்த லேட் ரெங்கசாமி வேலாளர் மகன் திரு. ராமசாமியிடம் பெறப்பட்ட வாக்குமூலம்-

மேற்படி கிராமத்தில் சிறுவயது முதல் வசித்து வருகிறேன். தற்போது வயது61. மேற்படி அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலர் உரிமம் கோரி கொடுத்துள்ள மனுவில் நான் முதல் மனுதாரர். மேற்படி திருக் கோயிலுக்கு சொந்தமான நஞ்சை நிலம் பல தலைமுறைகளாக மனுதாரர்களாகிய எங்களால் பராமரித்து வருகின்றோம். 9.8.1911-ல் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் மனுதாரர்களாகிய எங்களது முன்னோர்கள் 1.தர்மராஜ் வேலாளர் மகன் கோவிந்தசாமி வேலாளர், 2.தம்பிராயர் வேளாளர் மகன் ராஜப்ப வேலாளர், 3. சாமி செட்டியார் மகன் சொக்கலிங்கம் செட்டியர் 4.வடமலை நாயக்கர் மகன் கோவிந்தசாமி நாயக்கர், 5.ராமசாமி முதலியார் மகன் ரெங்கசாமி முதலியார் ஆகிய ஐந்து நபர்களையும் தர்ம கர்த்தாக்களாக நியமனம் செய்து மேற்படி கோயில் நிர்வாகத்தை பராமரித்து நடத்தி வர கிராமத்தில் இருபத்தி மூன்று நபர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

158- R.S.R.-ல் திருக்கோயில் இருக்கிற புலஎண்.2-ல் 2.13 ஏக்கர் நிலம், கோயிலுக்கு சொந்தமான ஏக்கர் 8.31 நஞ்சை நிலம் (புலஎண்.111) திருக்கோவில் நம்பகர்களாக எங்களுடைய முன்னோர்களான 1) தர்மராஜ் வேளாளர், 2) ரஜப்பன், 3) ரெங்கசாமி என்கிற ராமசாமி செட்டியார், 4) சிதம்பரம் முதலியார் மற்றும் அருணாசல தொண்டமான் ஆகியவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டு (அரசு கணக்கில்) எங்களை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது.

தொடர்ந்து தற்போதைய நில அளவை பதிவேட்டிலும் (UDR) மேற்படி நபர்களின் பெயரிலயே தொடர்ந்து பதிவு உள்ளது (நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

எனவே மேற்படி திருக்கோவிலும் அதற்குரிய சொத்துக்களும் எங்களுடைய முன்னோர்களால் நான்கு கரைதாரர்களாக இருந்து கோயிலுக்கு சொத்துக்களை வழங்கியும் கோயிலை தொடர்ந்து பலதலைமுறையாக பராமரித்தும் வந்துள்ளார்கள்.

எனவே மேற்படி திருக்கோயிலுக்கு மனுதாரர்களாகிய நான்கு கரைதாரர்களுக்கு உரிமம் வழங்கி உத்தரவு வழங்க வேணுமாய் பணிவுடன் வாக்குமூலம் கொடுத்து கொள்கிறேன்.

ஒப்பம்
ரெ.ராமசாமி
29.12.2009

என் முன்னிலையில் வாக்குமூலம் பெறப்பட்டது.

S/d:-

R.ஒளிநிலா,
ஆய்வாளர்,
இ.ச.அ.ஆ.துறை,
பட்டுக்கோட்டை.

# வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தமிழ்நாடு இந்து சமய அறநிலைய அட்சித் துறை ச.பி. 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்ய கேட்டு வரப் பெற்ற விண்ணப்பத்தில் கண்டுள்ள இரண்டாவது மனுதாரர் திரு. சி. பழனிவேல், த/பெ சின்னக்கண்ணு என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம்.

மேற்படி கிராமத்தில் பிறந்தது முதல் வசித்து வருகிறேன். எனது வயது40. ஷெ கிராமத்தில் எழுந்தருளியுள்ள அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பின் கண்ட நபர்களின் முதாதையர்களும், எனது முதாதையர்களும் ஷெ திருக்கோயிலுக்கு சொத்து எழுதி வைத்ததுடன் தொடர்ந்து தலை முறை தலை முறையாக பராமரித்து வந்துள்ளார்கள். தற்போது பின்கண்ட நபர்களாகிய நாங்கள் பராமரித்து 2002-ல் கும்பாபிஷேகம் முடித்து உள்ளோம். பின் கண்ட நபர்களுக்கு பரம்பரை உரிமம் வழங்கி உத்தரவிட வேணுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

1) திரு. R. ராமசாமி
2) திரு. சி. பழனிவேல்
3) திரு. M. சோலைவாசன் செட்டியார்
4) திரு. ஆர். ராஜேந்திரன்
5) திரு. சி. ரெங்கசாமி

ஒப்பம்
சி. பழனிவேலு

என்னால் வாக்குமூலம்
பெறப்பட்டது.

S/d:-
R. ஒளிநிலா,
ஆய்வாளர்,
பட்டுக்கோட்டை.

வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இலக்கா ச.பி. 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்வதற்கு பரம்பரை கேட்டுள்ள மனுதாரர் திரு. மு. சோலை வாசன் செட்டியார், த/பெ. முருகையன் செட்டியார் என்பவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம்.

மேற்படி கிராமத்தில் சிறுவயது முதல் வசித்து வருகிறேன். எனது வயது55 ஆகும். நான் இந்த மனுவில் 3வது மனுதாரர். ஷை கிராமத்தில் நான்கு கரைதாரர்களால் உருவாக்கப்பட்டு பல தலைமுறைகளுக்கு முன் மனுதாரர்களாகிய எங்களுடைய 5நபர்களின் முன்னோர்கள் மேற்படி திருக்கோயிலுக்கு சொத்துக்களை தானம் செய்தும், தொடர்ந்து பராமரித்து வருகின்றோம்.

எனவே மனுதாரர்களாகிய நான்கு கரைதாரர்களாகிய பின்வரும் நபர்களுக்கு பரம்பரை வழங்கி உத்தரவு வழங்க வேணுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

1). R.ராமசாமி, 2). C.பழனிவேல், 3). M.சோலைவாசன், 4). R.ராஜேந்திரன், 5). C.ரெங்கசாமி.

ஒப்பம்
மு.சோலைவாசன்

என் முன்னிலையில் வாக்குமூலம் பெறப்பட்டது.

S/d:-

R.ஒளிநிலா,
ஆய்வாளர்,
இ.ச.அ.ஆ.துறை,
பட்டுக்கோட்டை.

## வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இலக்கா ச.பி. 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்வதற்கு பரம்பரை கேட்டுள்ள மனுதாரர் திரு. ஆர்.ராஜேந்திர தொண்டமான், த/பெ. ராமலிங்கம் தொண்டமான் என்பவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம்.

மேற்படி கிராமத்தில் சிறுவயது முதல் வசித்து வருகிறேன். எனது வயது54. மேற்படி திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலர் நியமனம் செய்ய கேட்டுள்ளேன். பின்வரும் நான்கு கரைதாரர்களாகிய எங்களின் மூதாதையர்களால் மேற்படி திருக்கோயிலுக்கு சொத்து வழங்கப்பட்டு மேற்படி திருக்கோயில் மற்றும் சொத்துக்களை நான்கு கரைதாரர்களாகிய நாங்களும் எங்கள் முன்னோர்களும் ஷ கோயிலை பராமரித்து வந்துள்ளோம். இதனை ஊர் பெரிய மனிதர்களிடமும், உரிய ஆவணங்கள் மூலம் பரிசீலித்து, பின்வரும் நான்கு கரைதாரர்களுக்கும் பரம்பரை உரிமம் வழங்க பணிவுடன் வேண்டுகிறேன். பரம்பரை உரிமம் பெற்று செய் அறங்காவலராக கோயில் மேலும் வளர்ச்சி அடைய இலக்கா சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொள்கிறோன் என வாக்கு மூலம் கொடுத்துள்ளேன்.

1). R.ராமசாமி, 2). C.பழனிவேல், 3). M.சோலைவாசன், 4). R.ராஜேந்திரன், 5). C.ரெங்கசாமி.

ஒப்பம்
ரா.ராஜேந்திர தொண்டமான்

எனனால் வாக்குமூலம்
பெறப்பட்டது.

S/d:-
R.ஒளிநிலா,
ஆய்வாளர்,
இ.ச.அ.ஆ.துறை, பட்டுக்கோட்டை.

வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அ.மி. பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இலக்கா ச.பி. 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்வதற்கு பரம்பரை கேட்டுள்ள மனுதாரர்களில் 5வது மனுதாரர் திரு. சி. ரெங்கசாமி முதலியார், த/பெ. சிதம்பரம் முதலியாரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம்-

மேற்படி மனுவில் நான் 5வது மனுதாரர். மேற்படி கிராமத்தில் சிறுவயது முதல் வசித்து வருகிறேன். எனக்கு வயது 75. ஷை திருக்கோயிலுக்கு எங்கள் ஐந்து கரைதாரர்களின் மூதாதையர்கள் சொத்துகள் கொடுத்தும் கோயிலை பராமரித்தும் வந்துள்ளார்கள். மேற்படி கோயிலையும், கோயில் சொத்துக்களையும் பல தலைமுறைகளாக பாதுகாத்து வந்துள்ளோம். தற்போது பரம்பரை உரிமை வேண்டும் பின்வரும் மனுதாரர்களாகிய நாங்கள் தற்போது கோயில் சொத்தை பராமரித்து வருகிறோம். பின்வரும் நபர்களாக ஐந்து கரைதரர்களை பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்து உத்தரவு வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

1) R. ராமசாமி, S/o ரெங்கசாமி, 2) C. பழனிவேல், S/o சின்னக்கண்ணு, 3) M. சோலை வாசன் செட்டியார், S/o முருகையன் செட்டியார், 4) R. ராஜேந்திரன் தொண்டைமார், S/o ராமலிங்கம் தொண்டைமார், 5) C. ரெங்கசாமி முதலியார், S/o சிதம்பரம் முதலியார்.

ஒப்பம்
சி. ரெங்கசாமி முதலியார்

என்னால் வாக்குமூலம்
பெறப்பட்டது.

S/d:-
R. ஒளிநிலா, ஆய்வாளர்,
இ.ச.அ.நி.துறை
பட்டுக்கோட்டை.

# வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இலக்கா ச.பி. 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்வதற்கு மேற்படி கிராமத்தின் ஊராட்சி மன்ற தலைவர் திரு. **கோ.புருஷோத்தமன்,** S/o.கோவிந்த வேளாளர் என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம்-

மேற்படி கிராமத்திற்கு ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறேன். ஷை கிராமத்தில் சிறுவயது முதல் வசித்து வருகிறேன். வயது53. மேற்படி ஊராட்சிக்கு உட்பட்ட புலஎண்: 8(1), 111-ல் உள்ள அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலும் ஷை திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துகளும் கீழ்க்கண்ட நபர்களால் பராமரித்து வரப்படுகிறது. மேற்படி திருக்கோயில் சொத்துகள் மேற்படி ஐந்து நபர்களின் முதாதையர்களால் பராமரிக்கப்பட்டு வந்தது என எனது தந்தை வாயிலாகவும் மற்றும் ஊர் பெரியவர்கள் வாயிலாகவும் அறிந்துள்ளேன்.

1) R. ராமசாமி, S/o ரெங்கசாமி
2) C. பழனிவேல், S/o சின்னக்கண்ணு
3) M. சோலை வாசன் செட்டியார், S/o முருகையன் செட்டியார்
4) R. ராஜேந்திரன் தொண்டைமார், S/o ராமலிங்கம் தொண்டைமார்
5) C. ரெங்கசாமி முதலியார், S/o சிதம்பரம் முதலியார்

ஒப்பம்
கோ. புருசோத்தமன்

என்னால் வாக்குமூலம்
பெறப்பட்டது.

S/d:-
R. ஒளிநிலா, ஆய்வாளர்,
இ.ச.அ.நி.துறை
பட்டுக்கோட்டை.

## வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் வெண்டாக்கோட்டை அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்வதற்கு ஷெ கிராமத்தின் முக்கியஸ்தர் மற்றும் வயது முதிர்ந்தவரான திரு. மு.கணபதி, த/பெ.முருகையவேலாளர் என்பவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம்-

மேற்படி கிராமத்தில் சிறுவயது முதல் வசித்து வருகிறேன். எனது வயது69. மேற்படி கிராமத்தில் உள்ள அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மிகவும் பழுதடைந்திருந்தது. ஷெ கோயிலை புதுப்பித்து 2008-ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

மேற்படி திருக்கோயில் நான்கு கரைதாரர்களின் முயற்சியாலும் உழைப்பாலும் பெருளாதரத்திலும் பராமரிக்கப்பட்டு வந்ததும் மேற்படி நான்கு கரைதாரர்களால் திருக்கோயிலுக்கு சொத்து எழுதி வைக்கப்பட்டிருந்ததாக வாய் வழியாகவும் எனது முத்தாதையர் மூலம் அறிந்து கொண்டேன். மேற்படி திருக்கோயிலுக்கு பின்வரும் நபர்கள் பரம்பரை தர்மகர்த்தாவாக செயல்பட அனுமதி வேண்டியுள்ளது ஏற்புடையதாகவும் பின்வரும் நான்கு கரைதாரர்களுக்கு பரம்பரை உரிமம் வழங்கினால் கோயில் மென் மேலும் சிறப்புற வாய்ப்புகள் உள்ளது.

1). R.ராமசாமி, 2). C.பழனிவேல், 3). M.சோலைவாசன், 4). R.ராஜேந்திரன், 5). C.ரெங்கசாமி.

ஒப்பம்
மு.கணபதி

என்னால் வாக்குமூலம்
பெறப்பட்டது.

S/d:-
R.ஒளிநிலா, ஆய்வாளர்,
இந்து சமய அறநிலையத்துறை
பட்டுக்கோட்டை.

வாக்குமூலம்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அ.மி. பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இலக்கா ச.பி. 63(பி)-ன்கீழ் பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்வதற்கு மேற்படி கிராமத்தில் உள்ள லேட் கோவிந்த வேலாளர் மகன் வீரபெருமாள் என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம்-மனுதாரர்I

மேற்படி கிராமத்தில் சிறுவயது முதல் வசித்து வருகிறோம். எனக்கு தற்பொழுது 80வயது ஆகிறது. 1984 முதல் 1989 முடிய மேற்படி கிராமத்தின் ஊராட்சி மன்ற தலைவராக பணியாற்றியுள்ளேன். மேற்படி கிராமத்தில் உள்ள அ.மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலும், அதை சார்ந்த சொத்துகளையும் பின்னரும் நபர்களின் மூதாதையர்களும் பராமரித்து வந்தார்கள்.

1) R. ராமசாமி, S/o ரெங்கசாமி
2) C. பழனிவேல், S/o சின்னக்கண்ணு
3) M. சோலை வாசன் செட்டியார், S/o முருகையன் செட்டியார்
4) R. ராஜேந்திரன் தொண்டைமார், S/o ராமலிங்கம் தொண்டைமார்
5) C. ரெங்கசாமி முதலியார், S/o சிதம்பரம் முதலியார்

மேற்கண்ட நபர்களின் மூதாதையர்கள் நான்கு கரைதாரர்களாக இருந்து மேற்படி திருக்கோயில் நிர்வாகத்தையும், சொத்துக்களை தானமாக வழங்கி தொடர்ந்து பராமரித்து வருகிறார்கள். தற்போது மேற்கண்ட ஐந்து நபர்களும் பராமரித்து வருகிறார்கள். அன்னார்களுக்கு பரம்பரை உரிமம் வழங்கினால் கோயில் மேலும் வளர்ச்சியடையும்.

ஒப்பம்
கோ.வீரப்பெருமாள்

என்னால் வாக்குமூலம்
பெறப்பட்டது.

S/d:-
R. ஒளிநிலா, ஆய்வாளர்,
இந்து சமய அறநிலையத்துறை
பட்டுக்கோட்டை.

***************